2011 செப்டம்பர் 8]

அம்மா அவர்களின் பாதம் பணிந்து என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். செய்யாறு தொகுதியிலே நான்கு நீதிமன்றங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. நான்கு நீதிமன்றங்களும் 90 ஆண்டுகளுக்கு முன்பே கட்டப்பட்ட பழைமை வாய்ந்த கட்டடத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அங்கே வழக்காட ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் வந்து செல்கின்றனர். அந்த நீதிமன்றம் பழைமையான கட்டடத்தில் இயங்கி வருவதால், அதை ஒருங்கிணைந்த நீதிமன்றமாக இந்த ஆண்டே கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு செய்தி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஞா. செந்தமிழன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்குத்தான் நீதி நிருவாகம் பற்றிய மானியக் கோரிக்கையின்போது எந்தெந்த நீதிமன்றங்கள் அமைக்கப்படும் என்பது அறிவிப்புகளில் வெளியிடப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய கருத்துரு பரிசீலனை செய்யப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 101, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

101—

சுற்றுலாத் தலம்

***439—திருமதி ர. சுபா:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கெங்கவல்லி தொகுதிக்குட்பட்ட வடசென்னிமலை முருகன் கோவிலைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கெங்கவல்லி தொகுதிக்குட்பட்ட வடசென்னிமலை முருகன் கோயிலைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க கோரிக்கை வைத்துள்ளார். இதுசம்பந்தமாக, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்குக் கருத்துரு பெறுவதற்காகக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அங்கே சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருவதாகக் கருத்துரு பெறப்பட்டால், ஆவன செய்யப்படும் என்பதை இந்த நேரத்திலே தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா அவர்கள்.*

திருமதி ர. சுபா: *பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.*

திருமதி த. இந்திராகாந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண நாயகத்தை அழித்து, இன்று ஜனநாயகத்தை வென்றெடுத்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

என்னுடைய தொகுதிக்குட்பட்ட எரக்குடி பஞ்சாயத்தில், புளியஞ்சோலை என்ற சுற்றுலாத் தலம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் மேம்படுத்தப்பட்டு, சுற்றுலாத் தலமாக அறிவிக்கப்பட்டு நல்ல முறையில் செயல்பாட்டில் இருந்தது. கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் அவற்றைக் கண்டுகொள்ளாமல், அந்த இடம் பராமரிக்கப்படாததால் புல், புதர்கள் வளர்ந்துள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவற்றை மேம்படுத்தித் தருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

2011 செப்டம்பர் 8]

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் சொன்னபடி, அவர்கள் தொகுதிக்குட்பட்ட எரக்குடி பகுதியில் உள்ள புளியஞ்சோலை பகுதி ஏற்கெனவே சுற்றுலாத் தலமாக இருந்தது. கடந்த மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அவை சரிவரப் பராமரிக்கப்படவில்லை என்று ஏற்கெனவே எங்களுக்குத் தகவல் வந்திருக்கின்றது. நிச்சயமாக, மாவட்ட ஆட்சியர் மூலமாகக் கருத்துரு பெறப்பட்டு, அவற்றை மீண்டும் மேம்பாடு செய்வதற்கு ஆவன செய்யப்படும் என்பதை இந்த நேரத்திலே தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.சி. வீரமணி அவர்கள்.*

திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜோலார்பேட்டை தொகுதிக்குட்பட்ட ஏழைகளின் ஊட்டி என்று அழைக்கக்கூடிய எழில்மிகு ஏலகிரி மலைக்கு, சென்ற மைனாரிட்டி தி.மு.க. அரசால் அந்த மலையினுடைய வளர்ச்சிக்காக ரூபாய் 20 கோடி ஒதுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஒரு வருடத்திற்கு முன்பாக அந்தப் பணி தொடங்குவதற்காக ஒரு கோடி ரூபாய்க்கு ஒப்பந்தமும் வழங்கப்பட்டு இருக்கின்றது. ஒரு வருடத்திற்குமுன் வழங்கப்பட்ட அந்த ஒப்பந்தம், இன்றுவரை, அதற்குண்டான பணிகள் ஏதும் தொடங்கப்படவில்லை. இதுகுறித்து, தற்போதைய நிலவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலம் தங்கள்வாயிலாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், கடந்த மாதம் கோடை விழாவிற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடன்தான் அங்கே, அந்தப் பகுதிக்கு ஏழைகளின் கொடைக்கானல் என்று சொல்லக்கூடிய ஏலகிரி மலையை ஆய்வு செய்தோம். அங்கே அரசு சார்பிலே இருக்கக்கூடிய நிலத்தை, சுற்றுலாத் துறைக்குப் பெறக்கூடிய ஆவன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆகவே, அந்தப்*

பணிகளெல்லாம் முடிந்தவுடனேயே, நிச்சயமாக ஒரு ECO Tourism மற்றும் பூங்கா மேம்பாடுகளெல்லாம் செய்யப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம் அவர்கள்.

திரு. வி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் நகரம் என்பது சுற்றுலாத் தலமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. அங்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு நல்ல வசதிகள் கொண்ட இடம் ஏதுமில்லை. மாண்புமிகு இதய தெய்வம், தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய இந்தப் பொற்கால ஆட்சியிலே, காஞ்சிபுரத்திற்கு சுற்றலாத் துறையின்மூலமாக ஒரு Youth Hostel அமைத்துத் தர அரசு ஆவன செய்யப்படுமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது ஒரு நியாயமான கோரிக்கை. சென்னையை அடுத்தாற்போல் காஞ்சிபுரத்திற்கு அதிகமான சுற்றுலாப் பயணிகள் சென்று வருகிறார்கள். அவர்களுடைய இந்தக் கோரிக்கை கவனத்திலே எடுத்துக்கொள்ளப்பட்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் தெரிவித்து, நிச்சயமாக, அதற்குரிய ஆவன ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.என். கிட்டுசாமி அவர்கள்.

திரு. ஆர்.என். கிட்டுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வணங்குகிற தெய்வம், கழகத்தினுடைய 1½ கோடி உறுப்பினர்களுடைய ஒப்பற்ற தெய்வம், தமிழகத்தின் 7½ கோடி தமிழ் மக்களுடைய காவல் தெய்வமாக

2011 செப்டம்பர் 8]

விளங்கிக்கொண்டிருக்கிற தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை முதலிலே வணங்கி, சாதாரணத் தொண்டனாகிய என்னை அம்மா பேரவையினுடைய ஒன்றியச் செயலாளராக, ஈரோடு ஒருங்கிணைந்த மாவட்ட அம்மா பேரவையினுடைய மாவட்டச் செயலாளராக, 1994–இலே ஈரோடு மாவட்ட மத்திய வங்கியினுடைய தலைவராக, 1996–இலே சட்டமன்ற வேட்பாளராக, இப்பொழுது இந்த 14ஆவது சட்டமன்றத் தேர்தலிலே சட்டமன்ற வேட்பாளராக அறிவித்து, சட்டமன்ற உறுப்பினராக இங்கே அழகுபார்த்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு என்னுடைய கோடானு கோடி நன்றியை நான் முதலிலே தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுக் கொள்ளையன் வீரப்பனை மேலே அனுப்பி, அரசியல் கொள்ளையர்களை இந்த அவையைவிட்டு வெளியே துரத்தியதோடு மட்டுமல்ல; இன்றைக்கு ஒவ்வொருவரையும் எந்தெந்தச் சிறைச்சாலைகளுக்கு அனுப்ப வேண்டுமோ, அந்தந்தச் சிறைச்சாலைகளுக்கு அனுப்பி வைத்த நம்முடைய இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே எங்களுடைய மொடக்குறிச்சி தொகுதியில் அவல்பூந்துறை பேரூராட்சிப் பகுதிக்கு உட்பட்ட 200 ஏக்கர் அரசுக் குளம் அங்கே இருக்கிறது. அந்தக் குளத்தைத் தூர் வாரி, அங்கே சுற்றுலாப் பயணிகள் வந்து செல்வதற்கு ஏதுவாக படகுத் துறையையும், தீம் பார்க் போன்றவற்றை ஏற்பாடு செய்தால், அந்தப் பகுதி சிறப்பாக இருக்கும். அதுமட்டுமல்ல; ஈரோட்டிலிருந்து 15 கிலோ மீட்டர் அருகிலே அந்தக் குளம் இருக்கிறது. அந்த வழியாகத்தான் பழனி புனிதத் தலத்திற்குச் செல்லவேண்டும். அருகிலே தீரன் சின்னமலையினுடைய மணிமண்டபம் இருக்கிறது. எனவே, அந்த அரசுப் புறம்போக்கு நிலம் 200 ஏக்கர் நிலப் பரப்பிலே இருக்கின்ற அந்தக் குளத்தைத் தூர் வாரி, படகுத் துறை அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்*

கிட்டுசாமி அவர்கள் கேட்டதுபோல, ஏற்கெனவே அவர் கூறிய அவல்பூந்துறை என்ற அந்தக் குளம் தூர் வாரப்பட்டு, படகுத் துறை அமைக்க ஏற்பாடு செய்வதற்கான பணிகள் துவக்கப்பட்டுவிட்டன. அதைப்போல, அந்தப் பகுதிகளிலே அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருவதற்கான ஆவன நடவடிக்கைகளும், நிதி ஒதுக்கீடும் ஏற்கெனவே செய்யப்பட்டுவிட்டன. நிச்சயமாக புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே இந்தப் பணிகள் வெகு விரைவிலே முடிக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் தொகுதிக்குட்பட்ட இராமேஸ்வரம் ஒரு புனித நகரம். இந்தியா மட்டுமல்லாமல், உலகம் முழுவதும் இருந்து யாத்திரிகர்களும், சுற்றுலாப் பயணிகளும் அங்கே வருகிறார்கள். அங்கே சுற்றுலா வளர்ச்சிக்காக மத்திய அரசு சுமார் 13 கோடி ரூபாயை ஒதுக்கியது. சென்ற தி.மு.க. ஆட்சியிலே சுற்றுலா வளர்ச்சிக்காக, இராமேஸ்வரம் சுற்றுலா வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்ட அந்தத் தொகை முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. நான் இராமேஸ்வரம் சென்றபோது, நகராட்சி அலுவலரிடத்திலே பேட்டரியிலே இயங்கக்கூடிய கார்களெல்லாம் துருப் பிடித்தாற்போல இருக்கக்கூடிய அளவிற்கு நிலைமை மோசமாக இருக்கின்றது. மத்திய அரசு ஒதுக்கிய அந்தப் பணத்தை முறைகேடாக சென்ற ஆட்சியாளர்கள் பயன்படுத்தி இருக்கிறார்கள். அது குறித்து விசாரிப்பதற்கான நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ளுமா என்று உங்கள்வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, அங்கே கடந்த மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே பல--சில அல்ல--பல*

2011 செப்டம்பர் 8]

முறைகேடுகள் நடைபெற்றிருக்கின்றன. கடந்த 10, 15 நாட்களுக்கு முன்பாக பல செய்திகள் இதுசம்பந்தமாக வெளிவந்தன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, இதுபற்றிய நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆய்வு செய்யப்படும் என்பதை இந்த நேரத்திலே தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதோடுகூட, இங்கே மானியக் கோரிக்கையிலே இராமேஸ்வரத்திலே உள்ள மற்றொரு அறியப்படாத ஓலைகுடா பகுதியைக்கூட இந்த ஆண்டு சிறப்பான சுற்றுலாத் தலமாக அமைக்க ஆவன செய்யப்படும் என்பதையும் இந்த நேரத்திலே தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.*

திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைகளின் அரசி என்று சொல்லப்படுகிற நீலகிரி மலை என்பது நாள்தோறும் ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வெளிநாடுகளிலிருந்து வந்து செல்கிற ஒரு சுற்றுலாத் தலமாக இருக்கிறது. அந்தச் சுற்றுலாத் தலத்திற்குச் செல்கிற முகப்பில் கல்லாறு என்ற நீரோடை அமையப் பெற்றிருக்கிறது. அந்த நீரோடையைச் சுற்றி இயற்கை வளம் வாய்ந்த மரங்கள் அமைந்து, இயற்கை வளம் மிக்க ஒரு பகுதியாக இது இருக்கிறது. அந்தப் பகுதியிலே வெளிநாடுகளிலிருந்து வருகிற சுற்றுலாப் பயணிகள்கூட அங்கே நின்று பார்வையிட்டுச் செல்கிற ஒரு தலமாக இருக்கின்ற காரணத்தினாலே, வெளிநாடுகளிலிருந்து வருகிற மக்கள் தங்கிச் செல்கின்ற வகையிலே அங்கே கட்டடங்களைக் கட்டி அந்தத் தலத்தைச் சுற்றுலாத் தலமாக மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள் இந்தக் கல்லாறு பகுதி குறித்து*

தற்போது தெரிவித்துள்ளார். இதைப்பற்றி மாவட்ட ஆட்சியரிடம் தெரிவித்து, கருத்துரு பெறப்பட்டு அவர்கள் கேட்கக்கூடிய இந்த வசதிகளைச் செய்வதற்கு ஆய்வு செய்யப்படும். மேலும், அங்கே தங்கிச் செல்வதற்கான வசதிகளைச் செய்ய வேண்டும் என்று அவர் கேட்டிருக்கிறார். முதலிலே சுற்றுலாப் பயணிகள் பார்த்துச் செல்லக்கூடிய வகையிலே, அங்கே வரக்கூடிய சுற்றுலாப் பயணிகளுக்கு ஓய்வறைகளை மட்டும் சிறிய அளவிலே தற்போதுள்ள நிதி வசதிக்கேற்ப உடனடியாக அமைக்க, புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் தெரிவித்து, ஆய்வு செய்யப்பட்டு, அதைச் செய்யலாம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே சிறந்த மாங்குரோவ் காடுகளைக் கொண்டிருக்கிற பிச்சாவரம் சுற்றுலா மையம் தற்போது மோசமடைந்த நிலையிலே இருக்கிறது. அங்கே சுற்றுலாத் துறையின்மூலம் கட்டப்பட்டிருக்கிற தங்குமிடங்கள் மற்றும் ஓய்வறைகள் கடந்த 4, 5 ஆண்டுகளாக மூடிக் கிடக்கின்றன. இதனால் சுற்றுலாப் பயணிகள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாக்கப்படுகிறார்கள். எனவே, அரசு, கூடுதல் நிதி ஒதுக்கி பிச்சாவரம் சுற்றுலா மையத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்குமா என்று கேட்டுக்கொள்கிறேன். தமிழகமெங்கும் சுற்றுலாத் துறையின்மூலம் இயக்கப்படுகிற படகுத் துறைகளிலே பணியாற்றக்கூடிய தொழிலாளர்கள் எந்தவிதமான நிவாரணமும், சட்டப் பாதுகாப்பும் இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்குரிய சட்டப் பாதுகாப்பை அளிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதுபோல, பிச்சாவரம் பகுதிக்கு கடந்த ஒரு மாத காலத்திற்கு முன்பாக நேரடியாகச் சென்று ஆய்வு*

2011 செப்டம்பர் 8]

செய்யப்பட்டது. தற்போது அங்கே ஏற்கெனவே இருந்த ஓட்டல் பகுதி சாரதா ராம் என்ற தனியார் ஒருவருக்கு franchise*–ஆக விடப்பட்டு தற்போது அறைகள் எல்லாம் மேம்பாடு செய்யப்பட்டு, சுற்றுலாப் பயணிகள் தங்கக்கூடிய வகையிலே ஆவன செய்யப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன். அதோடு அங்கே நாங்கள் சென்றபோது குடிக்க குடிதண்ணீர் வசதி இல்லாத ஒரு சூழ்நிலை இருந்தது. உடனடியாக அந்தப் படகுக் குழாமில் குடிக்க குடிதண்ணீர் வைக்கக்கூடிய ஏற்பாடுகள் தற்போது செய்து முடிக்கப்பட்டுள்ளது. படகுத் தொழிலாளர்கள் பற்றிய சட்டப் பாதுகாப்புப் பிரச்சினை சம்பந்தமாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி முதலமைச்சர் அம்மா அவர்களிடம் தெரிவித்து, ஆவன செய்யக்கூடிய சூழ்நிலையை உருவாக்க முடியும் என்பதை இந்த நேரத்திலே தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக் அவர்கள்.*

திரு. எம்.கே. அசோக்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா இருக்கும் திசை நோக்கி வணங்கி, சென்னையிலேயே ஒரு பெரிய ஏரி என்பது வேளச்சேரியில் இருக்கின்றது. அந்த ஏரியைத் தூய்மைப்படுத்தி, படகுக் குழாம் அமைத்து சுற்றுலாத் தலமாக அறிவிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அசோக் அவர்கள் தற்போது என்னை தினமும் சந்திக்கின்றார். ஆனால் அப்போதெல்லாம் இதைச் சொல்லவில்லை. இப்போது தங்கள்வாயிலாகத் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக இங்கே கேட்டுள்ளார். நிச்சயமாக இதை ஆய்வு செய்து, மாவட்ட ஆட்சியரிடம் கருத்துரு பெற்று ஆவன செய்வதற்கான ஏற்பாடுகளை, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாசியோடு செய்து முடிப்பதற்கு ஆவன செய்யப்படும் என்பதை இந்த நேரத்திலே தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

[2011 செப்டம்பர் 8

முற்பகல் 10—45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 102, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

102—

பணிமனை

***667—திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெய்வேலி தொகுதி, நெய்வேலியில் போக்குவரத்துப் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நெய்வேலியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்க பரிசீலித்து, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று, அங்கு பணிமனை அமைப்பது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன் அவர்கள்.

திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலி தொகுதி, 65,000 மக்கள் வசிக்கின்ற தொகுதி. இந்த நெய்வேலியிலே முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வாழ்கின்றனர். இந்தப் பகுதிக்குப் புதிதாகப் பணிமனை அமைத்துத் தருவதற்கு எனது கன்னிப்பேச்சின்மூலமாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.